RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s129

# பல்துறையும் பெரியபுராணமும்

சி. அருணா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ சாராதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), (பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது), சேலம்-636016, தமிழ்நாடு, இந்தியா

# Versatility and Periyapuranam

S. Aruna [a, *]

[a] Department of Tamil, Sri Sarada College for Women (Autonomous), (Affiliated to Periyar University), Salem-636016, Tamil Nadu, India

* Corresponding Author: aruna.s2585@gmail.com

Received: 26-02-2022
Revised: 19-07-2022
Accepted: 27-07-2022
Published: 20-09-2022

**ABSTRACT**

Man sets up safe habitats to protect himself from the forces of nature. He also believed that science could help us solve problems in our daily lives. Man is making great achievements today because of his scientific progress. Astronomical research, medicine, and other technical research are constructed through science. Therefore, how the human body is structured, its movement, the forces required for movement, and all such things have been explained by science, and the benefits of science to improve daily life and protect human lives are immense. Sekkizhar's epic Thiruthondar Puranam demonstrates that he was a great artist. The arts have a special place in the Periyapuranam which is also known as national literature. The purpose of this article is to understand the scientific techniques in the fields of dance, song, sculpture, building, education, medicine, astrology, etc., through the Periyapuranam of that period.

**Keywords:** Periyapuranam, Sekkizhar, Thiruthondar Puranam, National Literature

## முன்னுரை

நாம் அன்றாடம் உண்பது முதல் உறங்குவது வரை வாழ்க்கை முழுவதுமே கலை எனப்படும். கலை அறுபத்து நான்கு என இலக்கியங்கள் கூறுகின்றன. அறிவியல், மருத்துவம், நுண்கலைகள், பண்பாடு, நாகரீகம், சமயம் முதலியவற்றையும் கலைகள் வெளிப்படுத்துகின்றன. எதையும் சாதாரணமாக காண்பது என்பது வேறு, கலைக் கண்ணோட்டத்தில் காண்பது என்பது வேறு, எவ்வித மாசுமின்றி தூய்மையான இன்பம் ஒன்றே மிளிர்கின்றதை காணலாம். பெரியபுராணத்தில் ஆடல் பாடல், சிற்பம், கட்டிடம், ஓவியம், கல்வி, கணிதம், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் உள்ள அறிவியல் பற்றி காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெரியபுராணத்தில் ஆடல் கலை

ஆடல் கலையில் புகழ்பெற்ற ஊர் திருவாரூர். அவ்வூரில் தேர்ச்சி பெற்ற நடனமாதர் வாழ்ந்தனர். சுந்தரர் திருவாரூர்க்கு சென்ற பொழுது அவரை ஆடற்பெண்டிற் நடனமாடி வரவேவற்றனர் என்பதை,

“மாதர் ஆடல் மணிமுழ வோசையும்

கீத ஓசையு மாய்க்கிளர் வுற்றவே”

பெரியபுரணம் இப்பாடலின் மூலம் விளக்குகின்றது (Subbarayanayakaravarkal, 2010). பெரியபுராணத்தில் பெரியோர்களை நாட்டிய மாடி வரவேற்றனர் என்றும் ஆடற்கலை சிறப்புற்று மதிக்கப்பெற்றதென்றும் கூறுகின்றது. மேலும், சிலப்பதிகாரத்தில் மாதவி பதினொரு வகையான நடனங்களை அறிந்தவள் எனும் பெருமையை,

"எண்ணும் எழுத்தும், இயல்ஐந்தும் பண் நான்கும்

பண்நின்ற சாத்து பதினொன்றும் மண்ணில் மேல்

போக்கினாள்; பூம்புகார்ப் பொன்தொடி மாதவி, தன்

வாக்கினால் ஆடு அரங்கின் வந்து"

என்ற பாடலும் எடுத்துரைக்கின்றது (Venkatasami Nattar, 2008). மேலும் காரைக்காலம்மையார் தன் வடிவத்தை உருமாறிய செய்தியை,

"வானமும் மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவம் ஆனார்"

என்ற வரிமூலம் அறியலாம். தனது உருவத்தை மாற்றிக்கொள்ள பேய் வடிவம் பூண்டு இறைவனை வேண்டி நடனமாடினார் என்று ஆடல்கலை பற்றி புராணத்தின் வழி அறியலாம் (Subbarayanayakaravarkal, 2010).

## பாடல்கலை

நாம் அனைவரும் மன அமைதிக்காக பாடலை கேட்பது இயல்பு, இசைக்கு மயங்காதவர் எவருமிலர், இசை இன்றேல் இன்பமில்லை. எனவேதான் இறைவனும் இசை வடிவமாக இருக்கிறான். இலக்கியங்களை மூன்று வகையாக பிரிப்பர். இயல், இசை, நாடகம் என்றும், அவற்றுள் ஆடல், பாடல் எனும் கலை மனிதனை உருகச் செய்யும் செயலில் ஒன்றாகும். திருஞானசம்பந்தர் மழலைப் பருவமாகிய மூன்றாம் வயதிலேயே இறைவனின் அருளால் பாடத் தொடங்கினார் என்பதை,

"தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிக்

காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்"

என்ற பாடலில் மூலம் ஞானசம்பந்தர் பண் அமைத்து பாடியுள்ளதை காணலாம் (Subbarayanayakaravarkal, 2010). காயத்ரி மந்திரம் ஓத வந்த அந்தணர்க்கு சிவநாமத்தை ஓதியதை போல சோதிடகட்டுகளில் பிணிக்கப்பட்டுள்ள மக்களை விடுவிக்க,

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி

மாசறு திங்கள் கங்கைமுடிமேல் அணிந்துள்ள என்உளமே புகுந்த அதனால்"

எனும் பாடல் வழிமூலம் பண் அமைத்து பாடுவதும், சோதிடம் பார்க்கப்படுவதும் போன்ற நுணுக்கமான அறிவியல் நுட்பங்களை பெரியபுராணத்தில் காணலாம் (Subbarayanayakaravarkal, 2010).

## சிற்பக்கலை

ஓவியக் கலையிலிருந்து சிற்பக்கலை வளர்ந்துள்ளது. கற்பாறைகள், கற்றூண்கள், மரங்கள் மண்ணிலும் கோயில்களிலும், சிற்பங்கள் இன்றளவும் காணப்படுகின்றன. சிவாலயங்களில் லிங்க வடிவிலிருந்தே சிற்பகலை உருவெடுத்திருக்க வாய்ப்புண்டு, அதன்பின் நடனம் மற்றும் திருவிளையாடல் முதலியவை சிற்பங்களாக செதுக்கப்பட்டு சிற்பக்கலை வளர்ச்சியடைந்தது.

"விண்பயில் புரங்கள் வேவ வைதீதத்தேரில் பேருத்

திண்சிலை குனிய நின்றார் செந்நிலை காணச்செய்தீர்"

எனும் பாடல் மூலம் குங்கலியக் கலய நாயனார் திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த சிவலிங்கத்தை நிமிர்த்தி வழிபட்டார் என்ற பாடலின் வழி அறிந்து கொள்ளலாம் (Subbarayanayakaravarkal, 2010). மேலும் வாழ்வுக்கு தேவையான மண்பானை சட்டி போன்ற உபயோகப் பொருட்களை செய்த நீலகண்டரை சுந்தரர்,

"திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்"

என குறித்தமையால் தச்சுத்தொழிலில் உள்ள நுட்பங்களை நன்கு அறியலாம் (Sivanayagam, 2015). மேலும் மணிமேகலையிலும் பனிக்கறை மண்டபத்தில் ஒளிந்திருந்த மணிமேகலையை வெளியே இருந்து உதயணன் பார்க்கிறான் என்ற செய்தி மூலம் பனிக்கறை மண்டபம் இருவர் உருவங்களை மட்டுமே வெளியிட்டு. ஒளிக்கு வழிவிட்டுபனிக்கறை மண்டபம் ஒலிக்கு தடை செய்கின்றது என்ற அறிவியல் செய்தியினை அறியமுடிக்கின்றது. அதனை,

"விளிப்பு அறை போகாது மெய்புறத்து இடூஉம் பளிக்கறை மண்டபம்"

எனும் பாடலின் மூலம் அறியலாம் (Backiamary, 2014). இதனை கலித்தொகையிலும் இடம்பெற்றதை

"பமை அமை சேக்கையுள் பாயலின் அறியாய் நீ

இணைபட நிவந்த நீலமென் சேக்கையுள்"

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Viswanathan, 2004).

## கல்விக்கலை

கல்வி தொன்றுதொட்டுவளர்ந்து வரும் நுண்கலைகளுள் ஒன்று. குழந்தை பிறந்ததும் ஒலிக்கும் ஒலி 'அம்மா' என்பதாகும். அதுவே முதல் கல்வியாக அமைகின்றது. இன்றளவும் புலனகுழு வழியாக கல்வியை கற்பிக்கின்றனர். இளங்குழந்தை பருவம் கடந்த பிறகு திருநாவுக்கரசுருக்கு "மருணீக்கியார்" என்று பெயர் சூட்டி முடி களைந்து அவரது தந்தை நூல்களை படிக்கச் செய்தார் அதனை,

"கருணீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்"

என்ற அடிகளின் வழி வெளிப்படுகின்றது (Subbarayanayakaravarkal, 2010). மேலும் சிறுதொண்டர் தனது மகனை மூன்று வயதில் பள்ளிக்கு அனுப்பினார் என்பதும் தெளிவாக விளங்குகின்றது. கல்வியின் மேன்மையை,

"கல்வி கரையில கற்பவர் நாள்சில"

என்ற நாலடியாரின் பாடல் மூலம் கல்வி அளவில்லாது எல்லையற்றது, முடிவற்றது என அறிய முடிகின்றது. கல்வியின் பயனை பக்தி இலக்கியம் மூலம் கண்டறியப்பட்டு தற்காலத்தில் கல்வியானது பல அறிவியல் சாதனங்களைக் கொண்டுகற்று வருவதையும் உணரமுடிக்கின்றது (Subramaniyan, 2007).

## கணித நூற்புலமைக்கலை

கணித நூல்களை கற்று மனிதன் பறவை விலங்குகள் போன்றவற்றின் இயக்கங்களையும் காலத்தையும் கொண்டு கணித்துக் கூறுபவர்களை காலக்கணிதர் என்றும் தற்சமயம் சோதிடர் என்றும் கூறுகின்றோம். பெரியபுராணத்தில் சுந்தரின் திருமணக்கோலம் பெற நல்ல நேரத்தில் திருமஞ்சனம் சாலையும் புகுந்தார் என்பதை,

"வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்

திருமணப் பந்தர் முன் சென்று வெண்சங்கம் எங்கும்"

எனும் பாடலின் வழி அறியலாம் (Subbarayanayakaravarkal, 2010). மேலும், கோச் செங்கட் சோழனின் தாய் கமலாவதியார் கருவுற்றிருந்த போது ஒரு நாழிகை கழித்து பிறந்த குழந்தை அரசாளும் என்று கணிதர் கூறினார். ஆகவே தாயார் தம்மை தலைகீழாகக் கட்டி தொங்கவிடச் செய்து பின் சோதிடர் குறித்த நேரத்தில் குழந்தையை பெற்றெடுத்தார் என்பதை,

"சோழனுயர்குலத்துச் சுபதேவன் கமலத் தோங்கும்

பெண்ணாகியவள் வயிற்றில் வைகிச் செங்கட்

பெருமனாய் தென்னவனாய்"

என்ற பாடல் உணர்த்துகின்றது. குழந்தை பிறக்கும் நேரத்தை கணித்து அக்கால சோதிடர் கூறியதை இக்காலத்தில் பல தொழில் நுட்ப சாதனங்கள் வளர்ந்து பிறக்கும் நேரத்தைக் குறிப்பதோடு உயிர்களின் உயிரையும் காப்பாற்றும் நேரத்தையும் உலகறியச் செய்கின்றது (Subbarayanayakaravarkal, 2010).

## பெரியபுராணத்தில் மருத்துவம்

மருந்து கொண்டு நோயைக் குணப்படுத்துவது காலங்காலமாக வழக்கினில் உள்ளது. மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்கும் நோயை விரட்டி ஆரோக்கியமான வாழ்வை வாழ செய்வது ஆயுள் வேதம். அதனைநாவுக்கரசர்,

"தீவிடம் நீங்க உய்ந்த திருமறையவர்தஞ் சேயும்

மேவிய உறக்கம் நீங்கி வரைஞ்தெழு வானைப் போன்று"

பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர் பெற செய்தார். மேலும் மருத்துவத்தின் பயன்பாடும் திருநீற்றின் பெருமை உலகறியச் செய்தார் (Subbarayanayakaravarkal, 2010). சூலை நோயால் நாவுக்கரசர் கடும் துன்பத்தை அடைந்தார். அவரை குணப்படுத்த திலகவதியார்.

"திருவானன் திருநீறு திலகவதியார் அளிப்ப

பெருவாழ்வு வந்த தெனப் பெருந்தகையார் பணிந்தேற்றல்"

என்று அறிவதன் மூலம் சூலை நோயினின்று குணமாகி இறைவனைப் போற்றினார் என்பதை பெரியபுராணம் எடுத்துரைக்கின்றது (Backiamary, 2014). மயிலாப்பூரில் சிறுவயதில் இறந்து குடத்திற்குள் சாம்பலாக இருந்த பூம்பாவை எனும் பெண்ணை உயிர் பெற செய்த செய்தியை,

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்

கட்டிடம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்

ஒட்டிட்ட பண்பின் உருந்திரப் பல்கணத்தார்க்

கட்டிடல் காணோதே போதியோ பூம்பாவாய்"

இவ்வரிகள் விளக்குகின்றன. அப்பதிகத்தில் சம்பந்தர் அப்பெண்ணின் உரிய வயது, இளமை, அழகோடு உயிர் பெறச் செய்தார் என்பதும் தெளிவாகின்றது (Backiamary, 2014). நோயுடையவர் நோயைதீர்க்கும் மருத்துவரிடம் சென்று தனது நோயை போக்க உதவ வேண்டி நிற்க தான் உதவ மாட்டேன் என வஞ்சிப்பது குற்றமாகும் என்பதை,

"வருந்திய செல்ல தீர்த்த திறனறியொருவன்

மருந்தறை தோடளந் கொடிதே"

என்று வரிகள் விளக்கும். நோயை குணமாக்குவது மருத்துவரின் கடமையாகும் அதனை தவிர்த்தல் பெரும் பாவச் செயலாகும் என்று கலித்தொகைப் பாடல் உணர்த்துகின்றது (Subbarayanayakaravarkal, 2010). மருத்துவத்தின் தன்மையை பெரியபுராணத்தில் கூறியிருப்பதாவது,

"-------- பிரான் திருக்கண்ணில் வந்த

ஊறுகண் டஞ்சித் தங்கண் இடத்தப்ப உதவுங்கையை

ஏறுயர்த் தவர் தங்கையில் பிடித்துக் கொண்டு என்வலத்தில்

மாறிலாய்! நிற்க என்று மன்னுபேர் அருள் புரிந்தார்"

என கண்ணப்பநாயனார் தனது கண்களை இறைவனுக்கு அருளி பெரும் பேறு பெற்றார். இன்றைய சூழலில் கண்தானம் செய்தல் இதயம் தானம் செய்தல் போன்ற செயல்களுக்கு கண்ணப்ப நாயனார் தான் முன்னோடியாக திகழ்கின்றார் (Subbarayanayakaravarkal, 2010). இன்றைய மருத்துவத்துறையில் முற்போக்கு சிந்தனை உடையதாக உள்ளதை அறியலாம். இதயம் மாற்று அறுவை சிகிச்சை மூலம் மனிதர்களின் வாழ்வை வாழச் செய்துள்ளனர். மனித நேயத்தின் மகத்தான சாதனையாக தம் மகனின் துடிக்கும் இதயத்தையே கொடையாக தந்த இக்கால வள்ளல்கள் தாம் அசோகன்-புஷ்பாஞ்சலி என்ற மருத்துவ தம்பதியினர். சிறுமிக்கு அவர்களது மகனின் இதயத்தை பொறுத்தினர். அந்த இதயத்திற்கு ஹிதேந்திரன் என்று பெயர் வைத்தனர். இதயம் கொடுத்து உலகத்தார் இதயங்களை வென்று கொள்ளைக் கொண்டான். உறுப்பு தானத்தின் உயர்வினை அன்றுதான் உலகமே வியந்து அறிந்ததும் கூட என்று கூறுகின்றனர். மண்ணில் ஒருவரையாவது வாழவைப்போம் என்று உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய நிகழ்வு மனதை கொள்ளைக் கொள்கின்றது.

"அறிவியல் சிந்தனை கொள்

ஆய்வி; மூழ்கு

இயன்றவரை புரிந்துகொள்

ஈடுபாட்டுடன் அணுகு

உண்மை கண்டறி

ஊக்கம் வெற்றி தரும்

என்றும் அறிவியலே வெல்லும்

ஏன் என்று கேள்

ஐயம் தெளிந்து சொல்

ஒருமித்து செயல்படு

ஓய்வற உழை

ஔடதமாம் அனுபவம்"

என்று அறிவியல் ஆத்திச்சூடியில் அறிவியல் சிந்தனைகளை தெள்ளத்தெளிவாக கூறுகின்றார் (Muthu, 2014).

## முடிவுரை

மனிதன் வாழ்வை மிக எளிமையாக மாற்றிக் கொள்ள அறிவியல் சாதனங்களை பயன்படுத்தி அணுவை துளைத்து ஏழ்கடலைப் புகித்திக் குறுகதரித்த என்று ஔவையார் கூறியுள்ள வாழ்க்கையில் மேன்மேலும் வளர்ச்சியடைய பல சாதனை நுட்பங்களை கண்டுபிடித்து முன்னேறிக் கொண்டே செல்கின்றான். கணினித்தமிழ், அறிவியல் தமிழ் போன்றவற்றை கணினியில் உட்புகுத்தி தன் கடுமையான செயல்களை எளிமையாக்கி உலகிற்கு தன் கண்முன்னே கொண்டுவந்து கைப்பேசி மூலம் தெளிவடைய செய்கின்றான். பழங்காலத்தில் மனிதன் அறிவியல், மருத்துவம், சோதிடம், கட்டிடக்கலை, சிற்பக்கலை, சமையற்கலை, போர்க்கலை போன்ற துறைகளில் பல பிரமிக்க வைக்கும் அளவிற்கு பல சாதனைகள் புரிந்து முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றான். அறிவியல்

நுட்பங்களை நுணுக்கமாக அறிந்து அதன் பெருமையை உணர செய்வதில் பெரும் ஆச்சரியம் என்பதை உணர முடிகின்றது. பல்வேறு அணுகுமுறைகளையும் கையாண்டு வாழ்வில் வெற்றி அடைகின்றனர் என்பதும் வியப்புக்குரியதாகும்.

## References


Backiamary, F., (2014) Vagamai Nokkil Ilakkiya Varalaru, New Century Book House, Chennai, India.

Muthu, S., (2014) Ariviyal Aathichudi, Thiruvaarasu Puthaga Nilaiyam, Chennai, India.

Sivanayagam, (2015) Thirugnaana Sambandhar Thevaaram, Vijaya Pathippagam, Chennai, India.

Subbarayanayakaravarkal, (2010) Thiruthondarpuraanam Ennum Periya Puraanam (Moolamum Uraiyum), Mulai Nilaiyam, Chennai, India.

Subramaniyan, S.V., (2007) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

Venkatasami Nattar, N.M., (2008) Silappathikaram, Ramaiya Pathipagam, Chennai, India.

Viswanathan, A., (2004) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License